European Translation Agency – Certified Translation Department
PL - 00-336 Warsaw, Kopernika 30 Street, fax: 022 244 22 07
tel: +48 693 333 333 e-mail: info@e-ling.eu
Website: www.e-ling.eu – 24h service

இலவச சட்ட உதவிக்கான வழிமுறைகள்

இலவச சட்ட உதவி, தனக்கென்று ஒரு வழக்கறிஞர் இல்லாமல் செயல்படும், அகதி அந்தஸ்து அல்லது துணை பாதுகாப்புக்கான கையறுநிலை பற்றிய ஒரு முடிவு வழங்கப்பட்ட வெளிநாட்டு விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுகிறது. அகதி அந்தஸ்து அல்லது துணை பாதுகாப்புக்கான கையறுநிலை பற்றிய ஒரு முடிவை பெற்றிருந்தாலும் 12 மார்ச் 2004 சமூக உதவி சட்டத்தின் (2015இன் சட்ட ஜர்னல், வகை 163, மேலும் திருத்தங்களுடன்) 8வது கட்டுரையில் கூறப்பட்டுள்ள வருமான அளவுகோல்களின் படி 100%க்கும் அதிகமாக வருமானம் பெறும் அகதிக்கு இலவச சட்ட உதவி வழங்கப்பட மாட்டாது.

இலவச சட்ட உதவி உள்ளடக்குவது:

1) பின்வரும் விஷயங்கள் குறித்த முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டை தயாரித்தல்:

a) அகதி அந்தஸ்து அல்லது துணை பாதுகாப்பு வழங்க மறுப்பது,

b) சர்வதேசப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோருவது,

c) சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கை சார்ந்த விண்ணப்பங்களைக் கையாளும் உறுப்பினர் அரசுக்கு விண்ணப்பதாரரை விண்ணப்ப பரிசோதனைக்காக அனுப்புவது,

d) ஏற்க மறுக்கப்பட்ட சர்வதேசப் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பான விண்ணப்பத்தை பற்றி அறிந்துகொள்ளுதல்

e) சர்வதேசப் பாதுகாப்பிற்கு மீண்டும் விண்ணப்பிக்கும் நோக்கம் தொடர்பாக விண்ணப்பதாரரின் கூற்றை கருத மறுப்பது,

f) அகதி அந்தஸ்து அல்லது துணை பாதுகாப்புக்கான கையறுநிலை;

2) கீழே கொடுக்கப்பட்டுள்ளது தொடர்பான விசாரணைகளில் சட்ட பிரதிநிதித்துவம்:

a) சர்வதேசப் பாதுகாப்பு வழங்குதல்,

b) சர்வதேசப் பாதுகாப்பு வழங்குவதற்கான பொறுப்புள்ள உறுப்பினர் அரசுக்கு விண்ணப்பதாரரை விண்ணப்ப பரிசீலனைக்காக மாற்றுதல்,

c) அகதி அந்தஸ்து அல்லது துணை பாதுகாப்புக்கான கையறுநிலை.

வெளிநாட்டினர் அலுவலகத் தலைவரால் நடத்தப்படும், இலவச சட்ட உதவி வழங்க சட்ட அனுமதி பெற்ற பொது நன்மை நடவடிக்கைகளில் இயங்கும் அரசு சாரா அமைப்புக்கள் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட அரசு சாரா அமைப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலம் இலவச சட்ட உதவி தனித்தனியே வழங்கப்படுகிறது. வழக்கறிஞர்கள் மற்றும் இலவச சட்ட உதவி வழங்க சட்ட அனுமதி பெற்ற பொது நன்மை நடவடிக்கைகளில் இயங்கும் அரசு சாரா அமைப்புக்கள் அகியவை தொடர்பான தகவல்கள் வெளிநாட்டினர் அலுவலக இணையதளமான www.udsc.gov.pl-ல் பட்டியலிடப்பட்டுள்ளன.

இலவச சட்ட உதவி பெற ஒரு வெளிநாட்டவர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர் அல்லது அரசு சாரா நிறுவனத்தின் பிரதிநிதிக்கு தன் சார்பாக வாதாடுவதற்கான உரிமையை வழங்குவது அவசியம்.